1969 ஆகஸ்ட் 19]

திரு. வை. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, உய்ய கொண்டான் ஆற்றில் கழிவுநீர் ஓடுவதுபற்றி அமைச்சர் அவர்களுக்கு ஏதேனும் குறிப்பு வந்ததா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தனிக் கேள்வி போடவும்.

மேல் பெரியாறு அணை

* 28 வினா.—**திரு. எஸ். அக்னிராஜு:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் பெரியாறு அணைக்கட்டின் மேற்கே மேல் பெரியாறு அணை அமைக்கும் திட்டம் ஏதாவது அரசின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், எந்த அளவில் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் பெரியாறு, வைகை அணை தவிர, வேறு அணை கட்ட அரசாங்கத்திடம் ஏதேனும் திட்டம் இருக்கிறதா? சில மாதங்களுக்கு முன்னர் அமைச்சர் அவர்கள் சென்று பார்த்து வந்தார்கள். அதைப்பற்றிய விவரம் தெரிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதைப்பற்றிய குறிப்பு ஒன்றும் தற்போது என்னிடம் இல்லை.

கோவிலார்-பெரியாறு அணை

* 36 வினா.—**திரு. எம். சுரேந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் ஜில்லாவில் கோவிலார்-பெரியாறு (பிளவக்கல்) அணைக்கட்டு திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா?

(இ) இதற்காகும் செலவுகளுக்கு மதிப்பிடப்பட்டு திட்டம் தயாரிக்கப் பட்டிருக்கிறதா?

(உ) இது எப்பொழுது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) ஆம்.

(உ) இத்திட்டத்திற்கு தொழில் நுட்ப வகையில் ஒப்புதல் அளிக்கும்படி மத்திய நீர்பாசன மின்சார ஆணைக்குழுவுக்கு எழுதப்பட்டுள்ளது.